ஜனவரி - 2013

திருவள்ளுவர் ஆண்டு 2044

# செந்தமிழ்


தொகுதி : 57
பகுதி : 3


திங்கள் இதழ்

விலை ரூ. 10/-

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



**2013 தைத்திருநாள் மத நல்லிணக்க பொங்கல் விழா,**
**செந்தமிழ் கல்லூரியில் கல்லூரிச் செயலாளர், கல்லூரி தலைவர், முதல்வர்,**
**முதன்மையர், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாணவ, மாணவியர்**

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 57 திங்கள் இதழ்

பகுதி : 3 திருவள்ளுவர் ஆண்டு 2044

ஜனவரி 2013

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

ஆசிரியர்

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| குறுந்தொகையில் மன்னர்கள் | து. அசோகன் | 4 |
| ஐங்குறுநூற்றுப் பாலைத்திணைப் பாடல்கள் காட்டும் புவி வெப்பமடைதலின் விளைவுகள் | ந. தர்மராஜ் | 11 |
| வாய் | ஆறுவிரல் ஐம்பொறி | 17 |
| தொல்காப்பியமும் உருபனியல் நெறியும் | முனைவர் வீ. ரேணுகாதேவி | 19 |
| திருக்குறள் மாட்சி ! | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 28 |
| ஆர். சூடாமணியின் சிறுகதைகளில் சமுதாயப் பார்வை | திருமதி. செ. கவிதா | 29 |
| தை ! | புலவர் சி. பாண்டுரங்கன் | 36 |
| தொல்காப்பிய அடிப்படையில் கல்வெட்டு மக்கட்பெயர்கள் | திருமதி. ந. அருள்மொழி | 37 |

# இதழ் மணம்

பேரன்புடையீர், வணக்கம் !

ஆங்கிலப் புத்தாண்டு எனினும் அனைத்தையும் தமிழன் போற்றுவான். இம்மாத இதழ் புதுப்பொலிவோடு பொங்கல் மணம் கமழ அறிஞர்களின் அரும்பெரும் கருத்துப் படையல்களோடு, கவிதைப் படையலாகவும் தங்கள் கைகளில் தவழ விடுவதில் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் பெருமையடைகின்றது. நாடாளும் மன்னர்களாக இருப்பினும், கவிபாடுவதிலும் வல்லவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதைக் 'குறுந்தொகையில் மன்னர்கள்' என்ற கட்டுரையில் அண்ணாமலை து. அசோகன் அவர்கள் தந்து நம்மை மகிழ்விக்கிறார். புவி வெப்பமடைவதால் ஆகும் விளைவுகளை ந. தர்மராஜ் அவர்கள் எழுதித் தமிழ் மக்களை விழிப்புணர்வடையச் செய்ய முயன்றிருக்கின்றார். ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் 'வாய்படும் பாடு' பற்றி இலக்கண வழி நின்று எடுத்தியம்பி வழக்கம்போல் நம்மை இன்பத்திலாழ்த்துகின்றார். மொழியை மொழியால் விளக்கியிருக்கும் தொல்காப்பிய இலக்கணத்தை மொழியறிஞர்களின் வழிநின்று முனைவர் ரேணுகா தேவி அவர்கள் மிகச் சிறப்பானதொரு கட்டுரையை இம்மாத இதழுக்குத் தந்து நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றார். மேலும் ஆர். சூடாமணியின் சமுதாயப் பார்வை, 'தொல்காப்பிய அடிப்படையில் கல்வெட்டு மக்கள் பெயர்கள்' என்ற கட்டுரைகளோடு புகழ் பெற்றவர்களின் மரபுக் கலைகளும் இடம் பெற்றுத் தங்கள் கைகளில் இம்மாத இதழ் தவழ்கிறது...

**முனைவர் க. சின்னப்பா**

இனி நீங்களும் இதழும்....

# குறுந்தொகையில் மன்னர்கள்

( சென்ற இதழ் தொடர்ச்சி )

து. அசோகன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

## அறிவுடை நம்பி

ஆடவர்களுள் சிறந்தவரை "நம்பி" என்ற சொல் குறிக்கும். பாண்டியர் குலத் தோன்றலாகிய இவ்வேந்தன் அறிவு முதிரப் பெற்றுச் சிறந்த பெருமகனாகத் திகழ்ந்தமையால் இவன் அறிவுடை நம்பி என்றழைக்கப் பெற்றான். புறநானூறு 184ஆம் பாடலில் பிசிராந்தையார் என்ற புலவர் இவரைக் குறித்துப் பாடியுள்ளார். இவர் இயற்றிய பாடல்களாக, நற்றிணை - 15ஆம் பாடல், அகநானூற்றில் 28-ஆம் பாடல், புறநானூற்றில் 188-ஆம் பாடல் மற்றும் குறுந்தொகையில் 230-ஆம் பாடல் என நான்கு பாடல்கள் காணப்படுகின்றன.

**"பேதை மையாற் பெருந்தகை கெழுமி**
**நோதகச் செய்ததொன் றுடையேன் கொல்லோ**
**வயச்சுறா வழங்குநீ ரத்தம்**
**சின்னா ளன்ன வரவறி யானெ."** - குறுந். 230:3-6

தோழி கூற்றுப் பாடலாக அமைந்த குறுந்தொகை 230-ஆம் பாடலில் வலிமையுடைய சுறாமீன்கள் உளவும் நீரைத் (கடலை) தாண்டி முன்பு வந்த தலைவனை யான் சேட்படுத்தியதன் விளைவாக அவன் வாராதாயினான் இது அவனுடைய தவறன்று நான்தான் அவ்வாறு செய்து விட்டேன் எனத் தோழி வருந்திக் கூறுவதாக இப்பாடலை அமைத்துள்ளார்.

## ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தனார்

வடநாட்டு வேந்தர்களை ஆரிய அரசன் என்று கூறுதல் மரபு. வடநாட்டு வேந்தர்களுள் சிலர் தமிழ் இலக்கண, இலக்கியங்களில் புலமை பெற்றவராக இருந்திருக்கின்றனர். சான்றாகக் கபிலர் ஆரிய அரசன் பிரகத்தன்

என்பானுக்குத் தமிழ் அறிவுறுத்தற்குக் குறிஞ்சிப் பாட்டை இயற்றினார் என்பதைக் காரணமாகக் கொள்ளலாம்.

ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தனார், இயற்றமிழ் அறிவும், கவிபுனையும் ஆற்றலும், யாழிசைப் பயிற்சியில் வன்மையும் பெற்றுச் சிறப்புற்று வாழ்ந்தமை தெரிகிறது. இவர் குறுந்தொகையில் 184-ஆம் பாடலைப் பாடியுள்ளார்.

**"மயிற்க ணன்ன மாண்முடிப் பாவை**
**நுண்வலைப் பரதவர் மடமகள்**
**கண்வலைப் படூஉங் கான லானே"** - குறுந். 184 : 5-7

நெய்தல் நிலத் தலைவியின் கண் போன்ற வலையில் தலைவனின் நெஞ்சம் சிக்கி அங்கே கண்டுண்டுவிட்டது; எனவே இனி அவ்வழியில் யாரும் செல்லாதீர், சென்றால் என்னைப் போன்று நீங்களும் துன்பப் படுவீர் என்று தலைவன் கூறுவதாகவும் நெய்தல் நில வலையுடன், தலைவியின் கண்ணை ஒப்பிட்டுக் கூறும் ஆசிரியரின் கவிப்புலமை பாராட்டுக்குரியது.

## குட்டுவன் கண்ணனார்

குட்டுவன் குடநாட்டில் உள்ளவன், கண்ணன் என்பது இவரது இயற்பெயர். ஆர் என்னும் விகுதி சேர்த்து கண்ணனார் என அழைக்கப்பட்டார். சேர மன்னர்களுக்குக் குட்டுவர் என்ற பெயர் வழங்கும் முறையால் இவர் சேரக் குடியைச் சேர்ந்தவர் என்று துணியலாம். இவர் பாடியதாக குறுந்தொகையில் 179-ஆம் பாடல் காணப்படுகிறது.

**"ஓங்குவரை யடுக்கத்துத் தீந்தேன் கிழித்த**
**குவையுடைப் பசுங்கழை தின்ற கயவாய்ப்**
**பேதை யானை சுவைத்த**
**கூழை மூங்கிற் குவட்டிடை யதுவே"**

குறிஞ்சித்திணைத் தோழி கூற்றாக அமைந்த இப்பாடலில், பகல் பொழுதை இரவு தின்று கொண்டிருக்கும் இவ்வேளையில் நீயும், உனது நாயும் வேட்டையாடி களைத்துப் போயிருக்கிறீர்கள். அது மட்டுமின்றி யானைகள் கூட்டமாகச் சுவையுடைய மூங்கில் குருத்தைத் தின்று கொண்டு உன் மனை

செல்லும் மலைவழியை மறைத்துநிற்கும். எனவே, எங்கள் ஊரில் தங்கி இளைப்பாறியப் பின்னர்ச் செல்லலாம் எனத் தலைவி கூறும் வழி தலைவியின் இரக்கத்தையும், மலையழகையும் நம் கண்முன் நிறுத்துகிறார் குட்டுவன் கண்ணனார்.

## கோப்பெருஞ்சோழன்

உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த சோழ மன்னர்களுள் ஒருவன். தன் ஆட்சித் திறத்தாலும், அறிவு நிறைவாலும் இவன் பாண்டி நாட்டுப் புலவர் பிசிராந்தையார் உள்ளங் கவர்ந்த உரவோன் ஆனான். கவிபாடுவதில் வல்லவனாக இருந்துள்ளான் என்பதை இவர் இயற்றிய புறநானூற்று 214, 215, 216ஆம் பாடல்களும், குறுந்தொகை - 20, 53, 129, 147ஆம் பாடல்களும் நமக்குச் சான்று பகருகின்றன.

**"அருளு மன்பு நீக்கித் துணைதுறந்து**
**பொருள்வயிற் பிரிவோ ருரவோ ராயின்**
**உரவோ ருரவோ ராக**
**மடவ மாக மடந்தை நாமே."** (குறுந். 20:14)

தலைவி கூற்றாக அமைந்த இப்பாடலில் எம்முடைய அருளையும், அன்பையும் நீக்கிவிட்டுப் பொருள் தேடச் செல்லும் தலைவன் அறிவுடையவர் எனின், அவ்வாறே ஆகுக. நானே அறிவில்லாதவளாக இருக்கிறேன். என்று அருளும், அன்பும் அரசர்க்கு மட்டுமின்றி தலைவனுக்கும் இன்றியமையாது என்பதைப் பாடலாசிரியர் முன் வைக்கிறார்.

தலைவன் கூற்றாக அமைந்த 129-ஆம் பாடலில் தலைவன் பாங்கனை அழைக்க "எலுவ சிறாஅரேமுறு நண்ப, புலவர் தோழா" என்று புலவர்களுக்குத் தோழனாக இருத்தலின் பெருமையைப் புலப்படுத்திக் கூறியுள்ள கோப்பெருஞ் சோழனின் நட்புள்ளம் நன்றாக நம் கண்முன் நிற்கிறது.

147-ஆம் பாடலில் தலைவியைப் பிரிந்து வாடும் தலைவனின் கனவில் தலைவி வருகிறாள். அவ்வாறு கனவில் காணுமாறு செய்த கனவிற்கு யான் எவ்வாறு கைமாறு செய்வேன் எனத் தலைவனின் புலம்பலைத் தனிச்

சிறப்புடன் நம் கண்முன் காணச் செய்யும் கவியின் கற்பனையை எண்ணி மகிழலாம்.

## நம்பி குட்டுவன்

சேரர்கள் குட்டநாட்டை ஆட்சி புரிந்தமையின் குட்டுவரெனப்பட்டனர். இவர் சேர பரம்பரையினர் என்பது குட்டுவன் என்ற சொல்லால் விளங்கும். நம்பி என்ற பெயர் நம்பி நெடுஞ்செழியன் ( புற - 139 ) என்பது போல அடைமொழியாக வந்தது. எனவே நம்பி குட்டுவன் சிறந்த அழகுடையோன் என எண்ணலாம். இவர் நற்றிணையில் - 145, 236, 345 ஆகிய மூன்று பாடல்களும், குறுந்தொகையில் - 109, 243 ஆகிய இரண்டு பாடல்களும் என ஐந்து பாடல்களைப் பாடியுள்ளதைக் காணமுடிகிறது.

**"முடக்கா லிறவின் முடங்குபுறப் பெருங்கிளை**
**புணரி யிகுதிரை தரூஉந் துறைவன்**
**புணரிய விருந்த ஞான்றும்**
**இன்னது மன்னோ நன்னுதற் கவினே"** - குறுந் - 109:1-4

தோழி கூற்றாக அமைந்த குறுந்தொகை 109-ஆம் பாடலில் தலைவன் காதில் விழும் தூரத்தில் இருந்தபொழுது தலைவிக்குக் கூறுவதாக தோழி தலைவன் மணந்து கொள்ளாமையின் தலைவியின் நெற்றி பொலிவிழந்து இருப்பதையும், அதன் காரணமாக ஊர்ப்பழிப்பதையும் கூறி நிற்பதாகப் பாடல் புனைந்துள்ளார்.

நெய்தல் நிலத்தலைவன் தன் அன்பை நினையாது, வினையே பெரிதெனக் கருதியிருந்து, தனக்குப் பசலை நோய் தந்தமையும், தான் துயிலாமல் வருந்துவதாகத் தலைவி கூற்று பாடலான 243-ஆம் பாடல் மூலம் தலைவியின் புலம்பலை கவிஞர் பாடியுள்ளமை சிறப்பே.

## பாண்டியன் பன்னாடு தந்தார்

சங்க கால அரச புலவர்களுள் ஒருவன், பாண்டிய வம்சத்தவன், பல நாடுகளை வென்று கைப்பற்றியதால் பாண்டியன் பன்னாடு தந்தான் என்று அழைக்கப்பெற்றான். இவன் இயற்பெயர் யாதென்று தெரியவில்லை. இவன் குறுந்தொகையில் 270-ஆம் பாடலைப் பாடியுள்ளமையால் இவரின் கவியுள்ளம் வெளிப்படுகிறது.

"தாழிருடுமிய மின்னித் தண்ணென
வீழுறை யினிய சிதறி யூழிற்
கழப்பிகு முரசின் முழங்கி யிடித்திடித்துப்
பெய்தினி வாழியோ பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்ம லுள்ளமோ" - குறுந் - 270 : 1-5

தலைவன் தாம் எண்ணிய வினையை முடித்து நிறைவான உள்ளமோடு தலைவியுடன் இருக்கையில் மகிழ்ச்சியின் எல்லை இல்லா இன்பத்தில், பெரிய மேகமே இருளை நீக்கி முரசு போல் முழங்கி மின்னுதலைச் செய்து, குளிர்ச்சியை உண்டாக்கும் மேகமெ நீ மழையைப் பெய்து வாழ்வாயாக எனத் தலைவன் கூற்றுவழி, அவனின் மகிழ்ச்சியையும், இயற்கையின் குளிர்ச்சியையும் இப்பாடலாசிரியர் திறம்பட விளக்கியுள்ளமையை காணலாம்.

## பாலை பாடிய பெருங்கடுங்கோ

சங்க காலத்தில் வாழ்ந்த, அதிக பாடல் பாடிய அரசப் புலவருள் ஒருவர். பேய்மகள் இளவெயினியார், புறநானூற்றில் 11-ஆம் பாடலில் இவரைச் சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்று குறிப்பிடுவதால் இவர் சேர மன்னர் என்று அறியலாம். பாலைத் திணையைப் பலவாறு தொகை நூல்களில் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவருடைய பாடல்களில் சொல்நயம், பொருள் நயம் படிப்பவரைப் பிணிப்பனவாய் அமைந்துள்ளன. இவர் பாடியனவாக இப்பொழுது கலித்தொகையுள் பாலைக் கலிப் பாடல்கள் - 35, அகநானூற்றில் - 12, நற்றிணையில் - 10, குறுந்தொகையில் - 10 பாடல்கள் என அறுபத்தேழு பாடல்கள் காணப்படுகின்றன. இவற்றுள் ஒன்று மட்டும் புறத்திணை தழுவியது. ஏனைய அறுபத்தாறும் அகப் பொருள் தழுவிய பாடல்களே. இவற்றுள் குறிஞ்சித் திணைப் பற்றியது ஒன்று, மருதம் பற்றியது ஒன்று, எஞ்சிய அறுபத்து நான்கும் பாலைப் பொருள் பற்றியே பாடியுள்ளார். எனவே தான் இவர் பாலைபாடிய பெருங்கடுங்கோ என பெயர் பெற்றார் என்பதை அறியலாம்.

இவர் குறுந்தொகையில் 16, 37, 124, 135, 137, 209, 231, 262, 283, 398 ஆகிய பத்து பாடல்களைப் பாடியுள்ளார்.

"உள்ளார் கொல்லோ தோழி கள்வர்தம்
பொன்புனை பகழி செப்பங் கொண்மார்
உகிர்நுதி புரட்டு மோசை போலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடிறந் தோரே." (குறுந். 16 : 1-5)

தோழி கூற்றாக அமைந்த 16-ஆம் பாடலில் பொருள் சேர்க்கும் பொருட்டு பிரிந்த தலைவன் பாலை நிலத்தில் செல்லும் போது ஆண் பல்லி, பெண் பல்லியை ஓசையிட்டு அழைக்கும் காட்சியை கண்டு, என்னை நினைப்பாரே என தலைவி வருந்துவதை பாலை நிலக் காட்சியுடன் ஒப்பிட்டு தலைவியின் வருத்தத்தை கூறும் கவிஞரின் கற்பனை வளத்தைக் காணலாம். மற்றும் பாலை நிலம் இன்னதாயின் தலைவனை பிரிந்த மகளிருக்கு இனிதாகுமோ என்று தோழி கூறியது - (குறுந் - 124), தலைவனின் பிரிவை விட பெரிதாக வருத்துமோ பெருங்காடு என்று தலைவி கூறுவது, நீ தனிமையால் வருந்த யான் நின்னை பிரிந்து சென்ற இடத்தே மனம் பொருந்தியிருப்பேனாதலின் இரவலர் என்னைத் துறந்து வராத நாட்கள் பலவாகுக என்று தலைவன் வஞ்சினம் கூறுவதாகவும் (குறுந் - 137) பாலை நிலக் காட்சியையும் தலைவன் தலைவியின் மன ஓட்டத்தையும் புலவர் படம் பிடித்து காட்டியுள்ளார்.

மேலும் தம்முடைய முன்னோரால் ஈட்டி வைத்த பொருளைச் செலவிட்டு வாழ்வோர் செல்வந்தர் எனப்பட்டார், அஃது இரந்து வாழ்வதினும் இழிவுடையது என்று உழைப்பின் பெருமையை கூறியுள்ளார் ( குறுந் - 283 ). தலைவி கூற்றாக அமைந்த குறுந்தொகை 398-ஆம் பாடலில், தோழி என்னைத் தேற்றுவதற்காக தலைவன் வருவான் என்று ஆறுதல் கூறுகிறாள்; அது என் மனதிற்கு ஆறுதலே ஒழிய என் துயரைப் போக்கவில்லையே என தலைவி வருந்தி கூறுவதாகத் தலைவியின் துயரை நாமும் பங்கு பெறச் செய்யுமாறு பாடியுள்ள கவிஞரின் கவித்திறன் போற்றுதலுக்கு உரியதே.

## மாலை மாறனார்

சங்க கால அரச புலவராகக் கருதப்படுகிறார். ஏனெனின், மாறனார் என்பது பாண்டிய வம்சத்தினர்க்கு உரிய பெயர் ஆதலின், பாண்டிய மரபினர்

என்று எண்ண இடமுண்டு. இவர் குறுந்தொகையுடன் 245-ம் பாடலான தோழிகூற்று பாடலை பாடியுள்ளார்.

"கடலங் கான லாய மாய்ந்தவென்
நலமிழந் தரனினு நனியின் னாதே
வாள்போல் வாய கொழுமடற் றாழை
மாலை வேனாட்டு வேலி யாகும்" (குறுந் - 245:1-4)

வாள் போன்ற வாயை உடைய மடல்கள் செறிந்த தாழையானது, வேல் நாட்டும் வேலியைப் போலப் பயன்தரும் கடற்கரை என்று இவர் கூறுவது கொண்டு வேல்களை வேலியாக நடும் வழக்கம் உண்டு என்பதையும் இதன் மூலம் நாட்டின் செல்வச் செழிப்பையும், காவல் முறையையும் விளக்கிக் கூறும் மாலை மாறனாரின் கவித்திறனை நாம் அறியலாம்.

## நிறைவுரை

இதுகாறும் குறுந்தொகையில் இடம் பெற்ற ஒன்பது அரசப் புலவர்களையும், அவர்களின் கற்பனை புலமையையும் கண்டோம். நாடாளும் மன்னர்களாக இருப்பினும் ஒரு ஆடவனின் கடமைகள் அகம், புறம் என்ற இரண்டு நிலைகளிலும் இருத்தல் வேண்டும் என்பதை நாடாளுவதையன்றி, போர் புரிதலையும் அன்றி, கவி பாடுவதிலும் வல்லவராக சங்க கால அரசர்கள் இருந்த நிலையினையும் கவிபாடுவதில் அனைத்து மக்களும் தலை சிறந்தவர்களே என்பதையும் இக்கட்டுரையின் வழி நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

*அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.*

*கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.*

# ஐங்குறுநூற்றுப் பாலைத்திணைப் பாடல்கள் காட்டும் புவி வெப்பமடைதலின் விளைவுகள்

ந. தர்மராஜ்
அண்ணாமலை நகர்

## முன்னுரை

இன்று உலகின் முக்கிய பிரச்சனைகளில் ஒன்றாகப் புவி வெப்பமடைதல் உள்ளது. இயற்கை வளங்களின் அழிவு, நீர் நிலை ஆதாரங்களை அதிக அளவில் சுரண்டுதல், காடுகள் பெருமளவில் அழிக்கப்படுதல். இதன் காரணமாக மழை வளம் குறைதல், நாகரீக உலகில் சுற்றுச் சூழல் மாசுபடல், மண் வளங்கள் அழித்தல் எனப் பல்வேறு காரணிகளால் பூமி வெப்பமடைகிறது.

பூமி வெப்பமடைவதால் ஏற்படும் விளைவுகளை அறிய சங்க இலக்கியப் பாலைத்திணைப் பாடல்கள் பெரிதும் துணைபுரிகின்றன. பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் நிலத்தை ஐந்தாகப் பிரித்துள்ளனர். அவை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன இவற்றில் பாலைத் திணைக்கு மட்டும் தனியாக நிலம் குறிப்பிடவில்லை. இதனைக் கீழ் வரும் நூற்பா மூலமாக அறியலாம்.

"அவற்றுள்
நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாததியப் பண்பே" (தொல். பொருள். நூற். 948)

குறிஞ்சித் திணையும் முல்லைத் திணையும் முறைமையில் திரிந்து பாலை நிலம் ஏற்படுவதாக உரையாசிரியர்கள் கூறுகின்றனர் என்பதைக் கீழ்காணும் பாடல் வரிகள் பதிவு செய்கின்றன.

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்" (சிலப் - காடுகாண் - 64-66)

பாலைத் திணைப் பாடல்களைக் கொண்டு பூமியில் நிலவுகின்ற வெப்பத்தையும், அதனால் நிலவுகின்ற ( ஏற்படுகின்ற ) விளைவுகளையும் அறிந்து கொள்ளலாம்.

## புவி வெப்பமடைதல்

மழை பெய்வது குறைவதாலும், பருவநிலை மாற்றத்தாலும் கொடுமையான சூரியக் கதிர்களின் வெப்பம் பூமியைத் தாக்குகின்றது. இதனைச் சங்க இலக்கிய ஐங்குறுநூற்றுப் பாடல்கள் பதிவு செய்கின்றன. ஐங்குறுநூற்றில் கோடைப் பருவம் நீண்டமையால் கொடிய வெப்பமானது மலையையும் பிளக்குமாறு தாக்குகின்றது. இதனைப் பின்வரும் பாடல் வரிகள் தெளிவுபடுத்துகின்றது.

**“நெடுங்கழை முளிய வேனி னீடிக்**
**கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்”** (ஐங். 322)

மேலும், கடுமையான வெப்பத்தை தாங்காமல் ஓமை மரம் வற்றி விரிந்த தலையுடன் காட்சி அளித்தலைச் சங்க இலக்கிய ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்று மிக அழகாகப் புலப்படுத்துவதை,

**“..... அலறுதலை யோமை யங்கவட் டேறிப்**
**புலம்புகொள விளிக்கு நிலங்காய் கானத்து”** (ஐங். 321)

மேற்கண்ட பாடல் வரிகள் தெளிவுப்படுத்துகின்றமையை அறியலாம்.

வெப்பக் காற்றால் அலைப்புண்டு அரைய மரத்தின் இலைகள் ஒலி எழுப்பும் என்பதைக் கீழ்காணும் சங்க இலக்கியப் பாடல் ஒன்று தெளிவாக விளக்குகின்றது.

**“வேனி யரையத் திலையொலி வெரீஇப்**
**போகில்புக வுண்ணாது பிரிதுபுலம் படரும்...”** (ஐங். 325)

மேற்கண்ட பாடல் வரிகளின் மூலமாகப் புவி வெப்பமடைதலுடன் காற்று வெப்பமடைவதைக் காணலாம். இவை போன்ற சூழல்கள் நிலவுவதால் மழை தருகின்ற மரங்கள் காய்ந்து காணப்படுகின்ற நிலையும் புலனாகின்றது. மழை வளம் தருவதில் மரங்களின் பங்கு இன்றியமையாததாகும்.

அக்காலத்தில் குளிர்தரும் மரங்கள் நிறைந்த சோலைகள் பல காணப்பட்டன. கொடிய வெப்பத்தின் காரணமாக அச்சோலைகள் காய்ந்து காணப்படுகின்ற நிலையை,

**"கடம் முதிர் சோலைய..."** (ஐங்கு. 328)

மேற்காணும் பாடல் வரி நன்கு விளக்குகின்றது. மேலும் சோலைகளிலுள்ள குளிர்தரும் மரங்கள் காய்வதுடன் அங்கு கள்ளிச் செடிகள் மிகுந்து காணப்படுகின்றன. ஒரு நாட்டின் பொருளாதார வளத்திற்கும் மழை வளத்திற்கும் காடுகள் இன்றியமையாதவை என்பதை மேற்கூறிய பாடல் வரியின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

மேலும், வெப்பத்தின் காரணமாக மரங்கள் தீப்பிடித்து எரிந்து காடுகள் அழிகின்றமையைச் சங்க இலக்கிய ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்று பின்வருமாறு கூறுகின்றது.

**"ஞெலிகழை முழங்கழல் வயமா வெரூஉம்**
**குன்றுடை யருஞ்சுரஞ் செலவயர்ந்த தனையே...."** (ஐங். 307)

மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து தீப்பற்றி எரிதலை மேற்காணும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. மேலும் இந்நூலிலே ( சங்க இலக்கிய ஐங்குருநூற்று ) 318, 356, 360 ஆகிய பாடல்களிலும் தீயைப் போன்று வெப்பம் மிகுந்திருப்பதை விளக்குகின்றன. மேலும் காடுகள் என்பது நீண்டு வளர்ந்த மரங்களையும் புல் பூண்டுகளையும் கொண்டுள்ளமையால் மலைகளும் நிலங்களும் பசுமையுடன் காட்சி அளிக்கும். ஆனால் மிகுதியான வெப்பத்தின் காரணமாக இங்கு இப்பசுமைத் தன்மை மாறியுள்ளமையைக் காட்டுத் தீயால் குன்றம் பசுமை இழந்தது என்றும் (308) பசுமை முழுவதும் கெட வெப்பத்தால் பாழ்பட்டு போன பாலை என்றும் (318) கொடிய வெப்பத்தின் காரணமாக நிலம் காய்ந்து காணப்படுவதை,

**".... புலம்புகொள விளிக்கும் நிலம்காய் கானத்து..."** (ஐங். 321)

எனும் பாடல் வரிகளின் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது. இந்நூலின் மற்றொரு பாடலிலே மிகுதியான வெப்பத்தின் காரணமாகச் சூடேறி துகள் மிகுகின்றமையை,

*"வெந்துக ளாகிய வெயிற்கட நீந்தி*
*வந்தன மாயினு மொழிகினிச் செலவே"* (ஐங். 330)

மேற்காணும் பாடல் வரிகள் ( சங்க இலக்கிய ஐங்குறுநூறு ) பதிவு செய்கின்றன.

## விலங்குகள் பாதிக்கப்படல்

பல்வேறு தொழில்களுக்கு உறுதுணையாகவும் பொருளாதார வளத்திற்குத் துணையாகவும் பயன்படும் விலங்குகள் வெப்பம் காரணமாகப் பாதிக்கப்படுகின்ற நிலையினைச் சங்க இலக்கியங்களில் ஐங்குறுநூற்றுப் பாடல் வழி புலவர் பெருமக்கள் கூறியிருப்பதைக் கீழ்வரும் பாடல் வரிகளின் மூலம் காணலாம்.

வெப்பம் மிகுதியான இடத்தில் ஒதுங்குவதற்குச் சிறிதும் நிழல் இன்றிக் காணப்படும் பகுதியில் அழகிய மான் ஒன்று தன் இணையோடு கூடி வருந்துகின்ற நிலையினை,

**"அழலவிர் நனந்தலை நிழலிடம் பெறாது**
**மடமா னம்பிணை மறியொடு திரங்க"** (ஐங். 326)

எனும் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன. மான்கள் மட்டுமின்றி யானைகளும் வெப்பம் தாங்காமல் தன் துதிக்கையை கீழே வைத்தால் நிலம் சுடும் என எண்ணித் தரையில் படாதவாறு விழிப்புடன் செல்வதை,

"பெருங்கை யானை யிருஞ்சின முறைக்கும்
வெஞ்சுர மரிய பென்னார்...." (ஐங். 352)

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன. இவ்வாறாக விலங்குகள் வெப்பத்தின் காரணமாகப் பாதிக்கப்படுகின்ற நிலையினை அறியலாம்.

## மக்கள் பாதிக்கப்படல்

வெப்பத்தின் காரணமாகத் தாவரங்கள், விலங்கினங்கள் மட்டுமின்றி மனித இனமும் பெரிய பாதிப்புக்குள்ளாகின்றது என்பதைச் சங்க இலக்கிய ஐங்குறுநூற்று பாலத்திணைப் பாடல்கள் பதிவு செய்கின்றன.

மிகுதியான வெப்பத்தைத் தாங்கமுடியாத மக்கள் வெள்ளோத்திர மலர்களால் தம் தலையினை மறைத்துச் சென்றனர் என்பதை,

"மால்வெள் ளோத்திரத்து மையில் வாலிணர்
அருஞ்சுரஞ் செல்வோர் சென்னிக் கூட்டும்" (ஐங். 301)

எனும் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன. மேலும், பூமியில் காணப்படும் கற்கள் மிகுந்த வெப்பத்தினால் சூடாகிப் போகின்றது. அதனால் மக்கள் தன் கால்களை அதில் வைத்து நடக்க முடியாமல் தவிக்கின்றனர். அதனோடு மட்டுமின்றி ஆயர்கள் தம் ஆநிரைகள் உண்ணும் நீருக்காகத் தம் கையிலுள்ள கோலால் நிலத்தைத் தோண்டி பள்ளம் உண்டாக்குகின்ற நிலையினை,

"கல்லாக் கோவலர் கோலிற் றொட்ட
ஆனிர்ப் பத்தல் யானை வௌவும்
கல்லதர்க் கவலை செல்லின் மெல்லியற்" (ஐங். 304)

என்ற பாடல் வரிகளின் வாயிலாக இதை அறியலாம்.

மக்கள் தம் கண்களைத் திறக்க முடியாத அளவிற்கு வெப்பம் மிகுந்திருக்கின்ற நிலையினை,

"கண்பொர விளங்கிய கதிர்தெறு வைப்பின்
மண்புரை பெருகிய மரமுளி கானம்" (ஐங். 319)

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன. மேலும் மரங்கள் வளம் இழந்து வறண்டு கருகிக் காணப்படுவதால் வெயிலுக்காக ஒதுங்குவதற்குக் கூட நிழல் இல்லாத அவல நிலை உள்ளமையைப் பாடல் 326, 381, 388 விளங்கின்றன. இதனை, கீழ்க்காணும் பாடல் வரிகளைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

"அழலவிர் நனந்தலை நிழலிடம் பெறாது...." (ஐங்கு. 326)
"செங்கான் மராஅத்த வரிநிழ லிருந்தோர்" (ஐங்கு. 381)
"கருங்கால் யாஅத்த வரிநிழ லசைஇச்...." (ஐங்கு. 388)

மக்கள் நடமாட்டம் இல்லாது போன பாழடைந்த இடத்தில் வசிக்கும் கொடும் பண்புகள் கொண்ட ஆறலைக் கள்வர்களின் இடமாகக் காட்டப்படுவதால் சமுதாய மதிப்புகள் சிதையும் நிலை உருவாகின்றன என்பதை,

"ஆள்வழக் கற்ற பால்படு நனந்தலை" (ஐங். 329)

எனும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

தோழியிடம் தலைவி, 'நல்ல மலை சூழ்ந்த நாடனொடு புணர்ந்துடன் போய் மீண்டும் வந்தமையால் மூங்கிலின் அழகு போன்ற தம் அழகினை இழந்த என் தோள்களைக் கோடை வெயில் தாக்கியமையால் பலரும் ஆராய்ந்த என் கவின் தொலைந்த நுதலையும் பார்த்து வருந்தற்க' என்பதால் வெப்பத்தின் காரணமாக அழகு இழக்கும் நிலையும் சங்ககால ஐங்குறுநூற்றுப் பாடல் வழி புலனாகின்றது.

## முடிவுரை

புவி வெப்பமடைவதால் இயற்கை வளங்கள் கெடுகின்றன. அதன் காரணமாக மழை வளம் குறைந்து வெப்பம் அதிகமாக வாய்ப்பு உருவாகின்றது. மிகுதியான வெப்பத்தினால் விலங்குகள், தாவரங்கள், பறவைகள் மட்டுமின்றி மனித இனமும் வருந்தும் என்பது சங்க இலக்கிய ஐங்குறுநூற்றுப் பாலைப் பாடல் வருணைகளால் தெளிவாகின்றது. மேலும் புவி வெப்பமடைதல் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட வேண்டும். அதனுடன் புவி வெப்பமாவதைத் தடுக்க நாம் அனைவரும் முயல வேண்டும்.

*நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று.*

*சிறப்பினும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு*
*ஆக்கம் எவனோ உயிர்க்கு.*

# வாய்

ஆறுவிரல் ஐம்பொறி

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளுள் வாய் மட்டுமே மூன்று செயல்களைச் செய்கிறது. சுவையறிவதற்கும் உணவுப் பொருள்களைப் பொடியாக்கிக் குழைத்து விழுங்குவதற்கும், பேசுவதற்கும் வாய் பயன்படுகிறது. இதழ், நா, பல், அண்ணம் என்னும் நான்கையும் வாயின் உறுப்புகளாக நன்னூல் நவின்றுள்ளது.

.... இதழ்நாப் பல்லணம்..... நன்னூல் - 74

பேசும் போது எழுத்துக்களை ஒலிக்க வாயின் உறுப்புகள் பயன்படுமாற்றை நன்னூலில் எழுத்துப் பிறப்பு இலக்கணப் பகுதியில் காணலாம். இந்நூல் வாயின் உறுப்புகளைப் பலவாறாகப் பகுத்துப் பகர்ந்துள்ளது. அவை கீழிதல், மேலிதழ், கடைநா, நடுநா, நுனிநா, மேல்வாயடி, மேல்வாயிடை, மேல்வாய் நுனி, நாக்கடியின் ஓரம், மேல்வாய்ப் பல்லின் அடிப்பகுதி, மேல் வாய்ப்பல், மேல்வாய் என்பனவாம். இவற்றை ஒவ்வொன்றாக நன்னூல் நூற்பாக்களின் வழி காண்போம்.

மீகி ழிதழுறப் பம்மப் பிறக்கும். 81. மீ-மேல். கீ-கீழ். உற-பொருந்த-ஒட்ட. **மேலிதழும் கீழிதழும்** பொருந்தப் ப,ம பிறக்கும். இஃது இந்நூற்பாவின் பொருள்.

கஙவும் சஞவும் டணவும் முதலிடை
நுனிநா வண்ண முறமுறை வருமே. 79.

**அடிநா மேல் வாயடியைச்** சேர ககர ஙகரங்களும் **இடைநா மேல்வாய் இடை நுனியைச்** சேர சகர ஞகரங்களும் **நுனிநா மேல்வாய் நுனியைச்** சேர டகர ணகரங்களும் பிறக்கும். இஃது இந்நூற்பாவின் பொருள்.

**இ ஈ எ ஏ ஐ அங் காப்போ**
**டணபன் முதனா விளிம்புற வருமே. 77.**

இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்தும் அங்காப்புடனே மேல்வாய்ப் பல்லை

நாக்கடி (முதல் நா) யின் ஓரம் பொருந்தப் பிறக்கும். இஃது இந்நூற்பாவின் பொருள்.

அண்பல் லடிநா முடியுறத் தந வரும். 80. **மேல்வாய்ப் பல்லினது** அடியை நா நுனி (நா முடி) பொருந்தத் தந பிறக்கும். இஃது இந்நூற்பாவின் பொருள்.

மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே. 85. **மேல்வாய்ப் பல்லைக்** கீழிதழ் பொருந்த வ பிறக்கும். இஃது இந்நூற்பாவின் பொருள்.

அண்ண நுனிநா வருட ரழ பிறக்கும். 83. **மேல்வாய்** நாக்கு நுனி வருட ர, ழ வரும். ( அண்ணம் – மேல்வாய்). இஃது இந்நூற்பாவின் பொருள்.

இதழ் குவிதல் ( உ ஊ ஒ ஓ ஔ விதழ் குவிவே. 78 ) வேறு. இதழ் பொருந்துதல் ( மீகீ ழிதழுறப் பம்மப் பிறக்கும் ) வேறு. எத்துணை நுண்மை, எழுத்துக்களை ஒலிக்கும் போது மிக நுண்ணிய பிழை கூட ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே நன்னூல் வாயின் உறுப்புகளை இத்தனைப் பகுதிகளாகப் பகுத்துப் பகுத்துக் கூறியுள்ளது.

தமிழ் தவறு ஏற்பட வழியில்லாத மொழி என்பது திண்ணம். கல் தோன்றி மண் தோன்றாத காலத்தே தோன்றிய தமிழ் இன்றளவும் நிலைத்துள்ளது இதனாலன்றோ.

*மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார்.*

*இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்*
*பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.*

# தொல்காப்பியமும் உருபனியல் நெறியும்

முனைவர் வி. ரேணுகாதேவி
மதுரை

இலக்கணம் என்பது மொழியை மொழியால் விளக்குவது. இசை, நடனம், இலக்கியம், விலங்கியல், பொறியியல் ஆகியவற்றை மொழியால், சொல்லால் விளக்குகின்றோம். மொழிவேறு அந்த படிப்புகள் வேறு.

மொழியால் மொழியின் புறத்தே நிற்பவற்றை விளக்கலாம். ஆனால் ஒரு மொழியை விளக்க வேண்டுமானால் என்ன செய்வது. வேறு வழியில்லை. மொழியையும் மொழியால் தான் விளக்க வேண்டும். மொழியை மொழியால் விளக்கும் இந்தப் பகுதிதான் இலக்கணம். இந்தப் பணியை ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்பே தொல்காப்பியர் செம்மையாகச் செய்திருக்கிறார்.

நாம் பெற்ற அறிவையெல்லாம் வெளிப்படுத்த உதவுவது மொழி. அந்த மொழியைப் பற்றிய எல்லா உண்மைகளையும் கண்டறிந்து வழங்கிப் பல்வேறு பயன்களை விளைவிப்பது மொழியியல்.

வணிகன் தன் வணிகத் தொழிலுக்காகவும், அரசியல்வாதி தன் அரசியலுக்காகவும் மொழியைப் பயன்படுத்துகின்றான். இலக்கியவாதி தன் இலக்கியப் படைப்புகளுக்காக மொழியைப் பயன்படுத்துகின்றான். நாம் நம் நோக்கங்களை அடைவதற்காக மொழியை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறோம். அதற்காகத்தான் மொழியைக் கற்றுக் கொள்கிறோம். கற்றுக் கொடுக்கிறோம்.

மொழியியலாளர் மொழியைப் பற்றிய உண்மைகளை தெரிந்து கொள்வதற்காகவும், அந்த உண்மைகளை பிறர்க்குத் தெரிவிப்பதற்காகவும் மொழியைப் பயன்படுத்துகிறார்; மொழியை கற்றுக் கொள்கிறார், பயன்படுத்துகிறார்.

மொழியியலாளரைத் தவிர ஏனையோர் மொழியைப் பயன்படுத்தும் போது அவர்களுடைய நோக்கம் மொழிக்குப்புறத்தே இருக்கும். மொழியியலாளன் மொழியைப் பயன்படுத்தும் போது அவனுடைய நோக்கமெல்லாம் மொழிக்கு அகத்தே இருக்கும்.

மொழியை பற்றிய உண்மைகளைக் கண்டறிவதையே தன் நோக்கமாக கொண்டுள்ள மொழியியலாளன் தன் ஆய்வின் எல்லையை இலக்கண இலக்கியங்களோடு சுருக்கிக் கொள்வதில்லை. எங்கெங்கு மொழி பயன்படுகின்றதோ அங்கெல்லாம் இவன் ஆய்வு நோக்கம் மொழியைப் பின்பற்றிச் செல்கின்றது.

மொழியின் அமைப்பு, இயங்குமுறை இவை பற்றி ஆராய்வதே மொழியியலாளனின் கடமை.

ஒலியும், சொல்லும், தொடரும் இவற்றால் விளையும் பொருளும் உலக மொழிகளுக்குப் பொதுவானவை. மொழியியலில் இவைதாம் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. இவற்றின் துணைகொண்டு தான் மொழியியல் பல்வேறு படிப்பியல்களோடு தொடர்பு கொண்டு சமுதாய மொழியியல், நரம்பு மொழியியல், கணக்கு மொழியியல், உளவியல் மொழியியல், மொழிபெயர்ப்பு, மானுட மொழியியல் எனச் செழித்து வளருகின்றது.

ஒலி, ஒலியமைப்பு, சொல், சொல்லமைப்பு, தொடர், தொடரமைப்பு, பொருண்மை ஆகிய இவையெல்லாம் ஒவ்வொரு மொழியிலும் காலத்திற்குக் காலம் இடத்திற்கு இடம் மாறிக் கொண்டிருக்கின்றன. இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் ஒரு மொழியில் ஏற்படும் மாற்றங்களுக்கு மொழியியல் விளக்கம் அளிக்கின்றது.

இன்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தொல்காப்பியம் அன்றைய சமுதாயத்தினரால் பேசப்பட்ட-படைக்கப்பட்ட இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்ட மொழிக்கு இலக்கணம் கூறுகின்றது. இஃது எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களைக் கொண்டது.

எழுத்துக்களின் பிறப்பு, வகைமை பற்றி எழுத்ததிகாரத்திலும், சொற்கள் அமைப்பு அவற்றின் வருகை பற்றி சொல்லதிகாரத்திலும், மக்களின் வாழ்வியலைப் பற்றி பொருளதிகாரத்திலும் கூறிச் சென்றிருக்கிறார்.

மொழியியலாளர் மொழியின் அமைப்பை ஒலியியல், ஒலியனியல், உருபனியல், தொடரியல், உருபொலியனியல், பொருண்மையியல் எனப் பகுத்து ஆராய்வர்.

சொற்களின் கட்டமைப்பைப்பற்றி ஆராய்வது உருபனியல் ஆகும். இவ்வுருபனியல் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் அமைந்துள்ள நெறி பற்றி இங்கு காணலாம்.

ஹாக்கெட், நைடா போன்றோர் பல்வேறு உருபனியல் கோட்பாடுகளை உருவாக்கியுள்ளனர். நைடாவின் "Morphology : The Descriptive Analysis of Words" என்னும் நூல் இத்துறையில் குறிப்பிடத்தக்க நூலாகும்.

மொழியின் அடிப்படைக் கூறுகளில் சொல் ஒன்றாகும். சிறிய, தனித்து நிற்கின்ற பொருள் கொண்ட மொழிக்கூறு உருபன் என்கிறார் புளூம்பீல்டு. இடைவெளிக்கிடையே தோன்றும் உருபன் மற்றும் உருபன் தொடர்களைச் சொற்கள் என்கிறார் ஹாக்கெட்.

ஒரு சொல் இயற்கையாக இரண்டு தொடர்பற்ற பொருள்களைக் குறிக்கலாம்.

படி → படி 'to read'
படி → படி 'step'
படி → படி 'measure'

சொல் தனியாக நிற்க வல்லது என்பதும் எழுதும் போது சொற்களுக்கிடையே இடம் விட்டு எழுதுவதும் இயற்கை.

ஒரு மொழியில் பல வகையானச் சொற்களைக் காண்கிறோம். ஓரசை (ஆ, மா, பா, கா) ஈரசை (காண், வீண், வேறு, வீடு, காடு) எனப் பிரிப்பது போல், ஓர் உருபன், ஈர் உருபன் என்றும் சொற்களைப் பிரிப்பர் (வீடு, வீடு + கள்).

சொற்பொருளைத் (lexcical meaning) தரும் சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளையும் தரும். 'கத்தி' என்பது ஒரு பொருளைத் தரும். 'கத்தியால்' என்னும் போது 'கத்தி' என்ற பொருளோடு ஆல் வேற்றுமைப் பொரு ளையும் தருகின்றது.

வீடு - house சொற்பொருள்

கள் - பன்மை இலக்கணப் பொருள்

தொல்காப்பியச் சொல்லதிகாரம் 1. கிளவியாக்கம் 2. வேற்றுமையியல் 3. வேற்றுமை மயங்கியல் 4. விளி மரபு 5. பெயரியல் 6. வினையியல் 7. இடையியல் 8. உரியியல் 9. எச்சவியல் என ஒன்பது இயல்களைக் கொண்டது. அவற்றுள் முதல் நான்கு இயல்கள் தொடரியல் பற்றியும், எஞ்சிய ஐந்து இயல்கள் உருபனியல் பற்றியும் விளக்குவதாக சாஸ்திரியார் தம் சொல்லதிகார முன்னுரையில் (1945 : VI) குறிப்பிடுகின்றார்.

சொல்லதிகாரம் முதல் நான்கு இயல்கள் சொற்களின் வருகை பற்றியும், (External distribution of the word) அடுத்த ஐந்து இயல்கள் சொற்களின் கட்டமைப்புப்பற்றியும் விளக்குகின்றன என்பதைக் காணும் பொழுது பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியம் உருபனியல் தொடரியல் கோட்பாடுகளை விளக்கியுள்ளது என்பதை அறியலாம்.

உருபனியல் எங்கு முடிந்து தொடரியல் எங்குத் தொடங்குகின்றது என்பதை அறுதியிட்டுக் கூற இயலாது. இக்கூற்றினை யுஜின், நைடாவும் "Morphology and syntax are not water tight compartments" என்று கூறுகிறார். சொற்களின் அமைப்பு (morbology) சொற்களின் வருகை (syntax) இரண்டையும் சொல்லதிகாரத்தில் விளக்க முற்பட்டுள்ளார் தொல்காப்பியர்.

தொல்காப்பியர் சொல்லைக் கிளவி, சொல், மொழி என்ற மூன்று சொற்களால் குறிக்கின்றார். தொல்காப்பியத்தில் 368 இடங்களிலும் சொல் 167 இடங்களிலும், மொழி 135 இடங்களிலும் பயிலப்பட்டுள்ளன.

சொல் எழுத்துக்களால் ஆக்கப்பட்டமையால் எழுத்தியலின் பின் சொல்லியல் கூறப்பட்டது என்னும் கூற்றிலிருந்து ஒன்றும் ஒன்றுக்கு மேற்பட்ட ஒலியன்களால் ஆனது என்னும் உருபனின் விளக்கம் பெறப்படுகின்றது. "Morpheme is made up of phonemes"

தொல்காப்பியர் பெயரியலில் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே ( தொல். சொல். 155 ) என்றார். அதாவது பொருள் குறித்தனவெல்லாம் சொல் என்பதாகும். உரையாசிரியர் சொல் என்பது எழுத்தொடு புணர்ந்து பொருள் தரும் ஓசை என்பர். A morpheme is minimum meaningful unit made up of phonemes என்னும் உருபனின் இலக்கணம் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. சொல் என்பது ஒன்றும் ஒன்றுக்கு மேற்பட்ட உருபன்களால் ஆனது.

தொல் காலத்து தொடர்கள் பெயர், வினை என்னும் இருவகைச் சொற்களால் ஆக்கப்பட்டது. உரிச்சொல்லும், இடைச்சொல்லும், பெயர், வினை, இவற்றின் பகுதியுமாக, விகுதியுமாக இருக்குமேயன்றி தனியாய் நில்லா என்னும் கருத்து,

சொல்லெனெப் படுப பெயரே வினையென்று
ஆயிரண்டென்ப வறிந்திசினோரே (தொல். சொல். 643)

இடைச்சொல் கிளவியுமுரி சொற்கிளவியும்
அவற்று வழி மருங்கிற் தோன்றும் என்ப (தொல். சொல். 644)

என்னும் சூத்திரங்களால் பெறப்பட்டது.

முதன் முதலாகச் சொல் வகைப்பாடு செய்த பிளாட்டோ பெயரையும், வினையையும் சொல்வகைகளாகக் கண்டார் (Lagons 1971) அரிஸ்டாட்டில் சொற்களைப் பெயர் வினை, இணைப்புச் சொல் என் மூன்றாகப் பகுத்தார்.

தொல்காப்பியர் சொற்களை இலக்கணத்தின் அடிப்படையில் பெயர், வினை, இடை, உரி, என நான்காகவும், சொற்களஞ்சியம் அடிப்படையில் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்காகவும் பாகுபாடு செய்துள்ளார்.

இயற்சொற் றிரிசொற் றிசைச்சொல் வடசொல்லென
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே (தொல். சொல். 880)

இயற்சொல் – செந்தமிழ் நாட்டு வழக்கொடு பொருந்தித் தன்னுடைய பொருள் வழுவாமல் இசைப்பது மு. வரதராசன் மக்களின் பேச்சு வழக்கிலுள்ள சொற்கள் இயற்சொல், மக்களின் பேச்சு வழக்கிழந்த சொல் திரிசொல் என்பார்.

சேனாவரையர் திரிசொல் – செய்யுட் சொல் என்பார்

சொல் தனியாகவும் தொடரிலும் திரியாது பொருள் வழங்கும் போது இயற்சொல் என்றும் தனியாகவும், தொடரிலும் திரிந்து பொருள் வழங்கும் போது திரிசொல் என்று வழங்கப்படும்.

திரிசொல் திரிந்த வழக்கு – உரையாசிரியர்கள்

செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரண்டு நிலப்பகுதியிலும் தத்தம் குறிப்பினை உடையது திசைச்சொல்.

தற்காலத் தமிழில் சொல்வகை பெயர், வினை, பெயரடை, வினையடை, இடைச்சொல் என ஐந்து வகைப்படும் என்பர் மொழியியலார். பெயரும் வினையும் தனித்து நின்று தனித்து பொருள் தரும். பெயரடையும், வினையடையும் தனித்து நிற்கும் சார்ந்து பொருள் தரும். இடைச்சொற்கள் தனித்து நில்லாது தனித்துப் பொருள் தராது சார்ந்து நின்று சான்று பொருள் தரும்.

பெயர் வேற்றுமையுருபை ஏற்று வரும் என்பதையும், காலம் காட்டாது நிற்கும் என்பதையும்

கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறு பெயர்க் காகும் இயற்கைய வென்ப (தொல். சொல். 553)

என்றும்,

பெயர் நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில் நிலை யொட்டும் ஒன்றலங் கடையே (தொல்.சொல். 554)

என்றும்,

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும் (தொல். சொல். 683)

என்றும் கூறுவது சொல்லியல் விளக்கமாக அமைகின்றது.

வினைச் சொற்கள் பற்றிப் பேசும் போது அவற்றின் ஆக்கம், அமைப்புமுறை பற்றிச் சொல்கிறார். வினைச் சொல்லைப் பற்றி ஆராயும் மொழியியலார், வினைச் சொல்லை அடிச்சொல் + காலங்காட்டும் இடைநிலைகள் + திணை, எண், பால் காட்டும் விகுதிகள் எனப் பகுத்து அவை எவ்வாறு இணைந்து சொற்களாகின்றன எனக் குறிப்பிட்டுச் சொல்வர். இந்நிலையில் தொல்காப்பியர் திட்ட வட்டமாக சொல்லாவிடினும் பல்வேறு விகுதி பற்றியும் கூறுகிறார்.

பெயர், வினைக்கு நேரடியாக வரைவிலக்கணம் சுட்டப்படவில்லை. அவற்றின் இயல்புகளே சுட்டப்பெறுகின்றன. இடைச்சொல், பெயர்ச்சொல், வினைச் சொல் இவற்றின் விகுதியாகும். சில இடைச்சொற்கள் சொற்றொடரின் இடையிலும் இறுதியிலும் வரும் அவை உம், ஏ என்பன.

அவனும் இவனும் வந்தான்.

என்பதிலுள்ள 'உம்'

'னஃகானொற்றே யாடூஉவறிசொல்' என்னும் தொடரில் ஒற்றே ஒற்று + ஏ இடைச்சொற்கள் தனித்து இயங்காது என்பதைத் தொல்காப்பியர்

இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே (தொல். சொல். 734)

என்னும் சூத்திரத்தால் கூறியுள்ளார்.

வேற்றுமையுருபுகளும், சாரியைகளும், வினை விகுதிகளும், அசைநிறை, இசைநிறை, குறிப்பிற் பொருள் செய்குவ, ஒப்பில் வழியாற் பொருள் செய்குவ முதலிய சொற்களும் இடைச்சொற்கள் ஆகும் என்பார் தொல்காப்பியர்.

இந்த இடைச் சொற்கள் அனைத்தும் பின்னொட்டுகளாகவே அமைகின்றன. இன்றைய வகைப் பாட்டியலார் தமிழ் மொழியை பின்னொட்டு மொழி எனக் குறிக்கின்றார்.

உரிச்சொல், இசை, குறிப்பு, பண்பு இவற்றில் ஒன்றைக் குறித்தும், பெயர், வினை, இவற்றுள் தடுமாறியும், ஒரு பொருள் பல பொருள் பெற்றும்

வரும் என்பார். 'உறு, தவ, சால, நனி' என்பன மிகுதியின் பொருள் குறித்த உரிச் சொற்கள் ஆகும். 'கடி' என்பது பல பொருள் குறித்த ஒரு சொல்லாக தொல்காப்பியர் காலத்தில் வழங்கப்பட்டது. இன்றையச் சூழலில் மொழியியலில இவை பற்றி பொருண்மையியலில் பேசப்படுகின்றது.

## தொகை

தொகை என்ற சொல் மறைபடுதல், ஒழுங்கு சேர்தல் என்று இருபொருட் கொண்ட தொகு (தொக்கி, தொகுத்து) என்ற வேர்ச் சொல்லிருந்து பிறந்தது. எனவே சொற்கள் ஒழுங்கு ஒலிக்கப்பட்டு இடையில் வேற்றுமையுருபு, உவம உருபு முதலியன மறைபட வரும் எனில் அவற்றைத் தொகை என வழங்கலாம். இவ்வாறு இரண்டு பொருளையும் உள்ளடக்கிய வேர்ச் சொல்லிலிருந்து பிறந்த தொகை என்ற சொல்லை தொல்காப்பியர் பயன் படுத்தியுள்ளதை சாஸ்திரியார் வியந்து பாராட்டுகிறார்.

தொகை வேற்றுமைத் தொகை, உவமைத்தொகை, வினைத் தொகை, பண்புத்தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை என ஆறு வகைப்படும் என்பது,

வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே யன்மொழித் தொகையே
அவ்வாறு என்ப தொகைமொழி நிலையே (தொல். சொல். 895)

என்னும் சூத்திரத்தால் பெறப்படும்.

இரண்டும் இரண்டிற்கு மேற்பட்ட சொற்களும் இணைந்து ஒரு சொல் போல் இயங்குவது தொகை (compound) ஆகும்.

Compound words have two (or more) free forms among their immediate constituents என்பார் புளும் பீல்டு (1933:226)

A compound as a word composed entirely of smaller words என்பார் Block and Trager (1942:225).

In the stem compounds both the immediate constituents are themselves stems (1958 : 240) என்பார் ஹாக்கெட்.

எனவே தொகை இரண்டும், இரண்டிற்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து ஒரு சொல் நீர்மத்தாய் இயங்குவது தொகை அதாவது கூட்டுச் சொல் எனலாம்.

இவை தவிர, வேற்றுமை உருபுகள், உருபு மயக்கம், இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்பன செய்யுள் வழக்கு எனவும், ஒரு பொருள் குறித்த பல சொல் (Synonyms) பல பொருள் குறித்த ஒரு சொல் (Polysemous) இரட்டைக் கிளவி போன்றவற்றை உருபனியல் நோக்கில் விரிவாக ஆராயலாம்.

## முடிவுரை

தொல்காப்பியர் சொல்வகை பற்றியும் கலைச்சொல் ஆக்கத்தைப் பற்றியும் சொல்லதிகாரத்தில் கூறியுள்ளார். ஒரு பொருள் குறித்த பல சொல், பல பொருள் குறித்த ஒரு சொல் போன்றவற்றை விளக்கியுள்ளார். உருபனியல் பற்றிய செய்திகள் சொல்லியலில் பரவலாகக் காணமுடிகின்றது.

*சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ*
*நன்றின்பால் உய்ப்ப தறிவு.*

*நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்*
*வான்இன்று அமையாது ஒழுக்கு.*

*குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்*
*மாசூர மாய்ந்து கெடும்.*

*கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து*
*மாணாத செய்வான் பகை.*

# திருக்குறள் மாட்சி !

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெ யர்த்த
        சீர்ச்செம்மல் ஜி.யூ.போப் இங்கி லாந்து
திரும்பியபின், அன்றொருநாள் மதகு ருக்கள்
        திருச்சபையின் கூட்டத்தில் கலந்து கொண்டார்.
இருந்தஒரு பாதிரியார் எழுந்து, "போப்பின்
        இந்தியமண் பயணம்ஏன்? பைபிள் தன்னைத்
தெரியாதோர் அறிவதற்கே அன்றோ? ஆனால்
        சென்றஇவர் தமிழகத்தில் செய்த தென்ன?

"தமிழர்களின் திருக்குறளைத் தலைமேல் ஏந்தித்
        தாரணிக்கே அதைப்பரப்பித் திரும்பி உள்ளார்!
தமதுகடன் மறந்திட்ட இவரை நாமும்
        தண்டிக்க வேண்டாமா?" என்றார். கேட்ட
சிமிழனைய ஜி.யூ.போப் எழுந்தார்; சொன்னார்;
        "திருமறைநம் விவிலியத்தைப் போற்று கின்றேன்;
அமிழ்தனைய திருக்குறளைப் படித்த போழ்தில்,
        அறிவாழக் கடலில்நான் மூழ்கிப் போனேன்."

"அரிஸ்டாடில் பேரறிஞர்; அவரும் கூட
        'அயலான்உன் பல்லுடைத்தால், அவனின் பல்லைத்
திருப்பியும்நீ உடைத்திடலாம்' என்றார்; ஆனால்
        திருக்குறளார் சொல்வதென்ன? 'இந்த மண்மேல்
ஒருவனிங்கே தீங்கிழைத்தால், அவனே நாண
        உயர்நன்மை செய்யுங்கள்' என்றார்! அந்த
அரியபெரும் மேதைபுகழ்ப் பாடி நானும்
        அகிலத்திற் குணர்த்தியதும் தவறா? சொல்வீர்!"

# ஆர். சூடாமணியின் சிறுகதைகளில் சமுதாயப் பார்வை

திருமதி. செ. கவிதா
அண்ணாமலை நகர்

## முன்னுரை

சங்க கால இலக்கியங்கள் காதல், வீரம், கொடை போன்ற கருத்தாக்கங்களை எடுத்துரைக்கின்றன. சங்கம் மருவிய கால கட்டத்தில் எழுந்த காப்பியங்கள் காதலோடு அறக் கருத்துக்களையும் விழுமியங்களாகக் கொண்டு படைக்கப்பட்டன. பதினென் கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பான்மை அறத்தையே போதித்தன. சோழர் காலத்தில் பக்திக்கு முதன்மை பெற்றது. சிற்றிலக்கியங்கள் பல்சுவைக் கருத்துக்களால் வளமை பெற்றது. தற்காலத்தில் சிறுகதை, புதினம், நாடகம், கவிதையென பல்கிப் பெருகி மக்களுக்கு இலக்கியச் சுவையை அளித்து வருகிறது.

இலக்கிய வகைமை எதுவாயினும் அவை, அக்காலச் சமுதாயத்தைத் தன்னகத்தே பிரதிபலிக்கத் தவறுவதில்லை. சமுதாயம் என்பது எப்பொழுதும் மாற்றங்களுக்கு உட்படுவதோடு வளர்ந்து கொண்டே இருக்கும். சமுதாயமானது தனது வளர்ச்சியால் பல மாறுபட்ட சிக்கல்களைச் சந்தித்துக் கொண்டே இருக்கும். அச்சிக்கல்களை அவிழ்ப்பதில் படைப்பாளிகள் தம் பங்களிப்பைச் செய்து கொண்டே இருப்பர். அதில் மிகச் சிறப்பு வாய்ந்தவை வரலாற்றில் இடம் பெறுவது உண்டு. அவற்றில் பெண்ணியப் படைப்பாளிகள் குறிப்பிடத்தக்கவர்கள். அந்த வகையில் சமுதாய மேம்பாட்டுச் சிந்தனையாளர் ஆர். சூடாமணியின் பங்களிப்பு போற்றத்தக்க ஒன்றாகும்.

## சூடாமணியின் எழுத்துலகம்

சூடாமணி பிறந்த ஊர் தஞ்சாவூர் மாவட்டம் தண்டாளம் என்னும் சிற்றூராகும். 1931-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் பத்தாம் நாள் குடும்பத்தின் மூன்றாவது மகளாகப் பிறந்தார். தந்தையாரின் பணி நிமிர்த்தமாகச் சென்னைக்குக் குடி பெயர்ந்தனர். சூடாமணி தன் அடிப்படைக் கல்வியை வீட்டிலேயே பயின்றார். தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் புலமை பெற்று விளங்கினார்.

தினமணி கதிரில் 1954-ஆம் ஆண்டு 'பரிசு விமரிசனம்' என்ற சிறுகதை வெளிவந்தது. இதுவே ஆர். சூடாமணியின் முதல் படைப்பாகும். அன்று தொடங்கி இறுதி மூச்சிருக்கும் வரை எழுத்துப் பணிக்காகவே தன்னை அற்பணித்துக் கொண்டார்.

## சூடாமணியின் படைப்புகள்

ஆர். சூடாமணி எழுத்துப் பணி ஐம்பத்து ஐந்து ஆண்டுகளைக் கடந்து நிற்கின்றது. தன்னால் வெளியிடப்பட்ட படைப்புகளை அவரே பட்டியலிடுகிறார்.

> மொத்தத் தமிழ்க் கவிதைகள் (சில நாடகங்கள், கட்டுரைகள் உட்பட) - 613, மொத்த ஆங்கிலக் கதைகள் ( சில நாடகங்கள், கட்டுரைகள் உட்பட ) - 286, ஆங்கிலம், இந்தி மற்றும் பிற இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டவை 100க்கும் மேல். இவற்றில் பல கதைகள் அந்தந்த மொழியின் கதைத் தொகுப்புகளில் சேர்க்கப்பட்டவை, தமிழில் புத்தகங்கள் - 37, ஆங்கிலத்தில் புத்தகம் ( தமிழிலிருந்து மொழி பெயர்ப்பு) 1, நாவல் - 8, நாடகம் - 3, குறுநாவல் 18.

மேலும் தமிழ்க் கவிதைகள் பல தொகுப்புகளிலும் சேர்க்கப்பட்டுள்ளன. அவரது படைப்பு பன்மைக் கூறுகளில் விரிந்து நிற்கிறது. பலமொழிப் புலமையும் அவரிடம் நிறைந்துள்ளதை அறிய முடிகிறது. மொழி பெயர்ப்புத் துறையிலும் தனியிடம் வகிக்கிறார் என்பது தெளிவு. சூடாமணியின் படைப்புக்களில் சமுதாயப் படைப்புகளே முதன்மை பெறுவதை இக்கட்டுரை எடுத்தியம்புகின்றது.

## மனிதனும் சமுதாயமும்

மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பு பிரிக்கமுடியாத ஒன்றாகும். மனிதன் சமுதாயத்தையும், சமுதாயம் மனிதனையும் சார்ந்து இருக்க வேண்டியது கட்டாயத் தேவையாகும். தனிமனிதன் மேம்பாடு அடைந்தால் அவனைச் சார்ந்த குடும்பம் முன்னேற்றமடையும். ஒவ்வொரு குடும்பமும் மேம்பட்டால் ஒட்டுமொத்த சமுதாயமும் மேம்படும். அதே வேளையில், தனியொரு மனிதன் வறுமைப் பிணியால் வாட்டமுற்றால் அது சமுதாயத்தையே கெட்டழித்துவிடும்.

தனியாக வாழ்ந்த மனிதன் கூடி வாழத் தொடங்கினான். வேட்டையாடியவன் விவசாயம் செய்தான். பலமாக விளங்கியவன் தலைவனானான். பெருந்தலைவன் அரசனானான். அரசனுக்குக் கீழ் பல்வேறு மனிதர்களும் கூடி வாழ்ந்தனர். தனக்கென ஒரு கோட்பாட்டை உருவாக்கிக் கொண்டனர். அவ்வாறு மனிதனால் உருவாக்கப்பட்ட கோட்பாட்டை மீறுதல் குற்றச் செயலாகக் கருதப்பட்டது. கோட்பாட்டை மீறும் மனிதன் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டான். இருப்பினும் தனிமனிதனின் பேராசையால் சமுதாயத்தில் குற்றச் செயல்கள் அதிகரிக்கத் தலைப்பட்டது. சமுதாயச் சிந்தனையுள்ள படைப்பாளிகள் தம் படைப்பில் சமுதாயத்தின் நிறை, குறைகளைப் பிரதிபலிக்கத் தவறுவதில்லை. அவ்வகையில் குற்றங்களைக் களைந்து அவற்றிற்கான தீர்வுகளையும் எடுத்துக் கூறும் சமுதாயச் சீர்திருத்த விஞ்ஞானியாய்த் திகழ்கிறார் ஆர். சூடாமணி.

## படைப்பாளியின் சமுதாயப் பார்வை

சமுதாயம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பாகும். அவ்வமைப்பில் அனைவரும் சமமாக வாழ்வதில்லை. அச்சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள், நிறை குறைகள் காணப்படுகின்றன. அவற்றால் மனிதனின் வாழ்க்கைப் போக்குகள் மாற்றப்படுகின்றன. அவற்றைக் கண்டு, கேட்டு தமது சொந்தப் பட்டறிவோடு இணைத்துச் சிறந்த போக்கில் சிறுகதை வடித்துக் கொடுப்பவர்கள் சமுதாயக் கலைஞர்கள். ஆர். சூடாமணியும் தான் காணும் சமுதாயம் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதையும் அதற்கான தீர்வையும் தன் எழுத்தில் வெளிப்படுத்தியுள்ளார். அவற்றை இக்கட்டுரையில் காணலாம்.

## வறுமை நிலை

சமுதாயத்தில் தனி ஒரு மனிதனுக்கு உணவு, உடை, உறைவிடம் இம்மூன்றும் அத்தியாவசியத் தேவையாகும். ஆனால் கடைநிலையில் உள்ள மனிதனுக்கு இம்மூன்றும் கிட்டுவதில்லை. இதனால் வறுமை பிணிக்கப்பட்டு வாழ்க்கையில் வாட்டமுறுகின்றான். 'இரு இருள்களிடையே ஒரு சொர்க்கம்' என்ற கதையில் எங்கோ தூர தேசத்தில் வறுமையால் பட்டினிச் சாவு நடந்தால்

அதற்காகப் பரிதாப்படும் மனிதன் தனக்கும் அந்நிலையே என உணரும் போது சொல்லொணாத் துயரம் அடைகிறான் என்பதை விவரிக்கும் போது,

> பட்டினிச் சாவுகள்.... பேப்பரில் படித்திருக்கிறான். முன்பு அதெல்லாம் தூரக் காட்சி, யாருக்கோ, எங்கேயோ, தன்னை கலக்காத அநுதாபம், ஆத்திரம், ஆனால் இப்போது அந்த உண்மை நெருங்கி வந்து வயிற்றிலேயே சுட்டது. நானும் அப்படித்தான் சாகப் போகிறேன் என்ற உணர்வில் அநுதாபம் தார்மீகச் சீற்றம் என்பதெல்லாம் போய், குடலின் அக்கினி ஒன்றுதான் உலகமாய் நின்றது ( இரு இருள்களிடையே ஒரு சொர்க்கம் ப. 135)

பசிப்பிணியால் துயரடையும் ஒரு மனிதனின் வாழ்க்கையை விவரிக்கின்றார். பசி, இருள் சூழ்ந்து வயிற்றைச் சுடுகின்றது. 'வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு *வாழும் மனிதருக்கெல்லாம்*' என்ற பாரதியின் தடத்திலேயே ஆசிரியரும் பயணிக்கின்றார். முடிவாக, பசிக்கும் வயிற்றுக்குச் சோறிடலே சொர்க்கம் என்று கதையை நிறைவு செய்கிறார்.

'கொடுமை கொடுமை வறுமை கொடுமை அதனினும் கொடுமை இளமையில் வறுமை' என்றார் அவ்வையார். குடும்பத்தில் மூத்த மகனாகப் பிறக்கிறான் ஜக்கு. எதிர்காலக் கனவுகளோடு பத்தாம் வகுப்பு முடித்த 'ஜக்கு' வறுமையின் காரணமாகத் தன் அப்பாவின் நண்பர் ஒருவரின் கடையிலேயே வேலை செய்கிறான் என்பதைத் 'தோழமை' என்ற கதையில் ஆசிரியர் சுட்டியுள்ளார். அக்கருத்து,

> பதினைந்து வயது முடிந்து மூன்று மாதங்கள் தான் ஆகியிருந்தன. எஸ்.எஸ்.எல்.ஸி. எழுதியவுடனேயே முடிவுக்குக் கூடக் காத்திராமல் வேலைக்குப்போகத் துடித்த அவனை அப்பாவின் நண்பர் ஒருவர்தம் சைக்கிள் தொழிற்சாலையில் பணிபுரிய அமர்த்திக் கொண்டார். (தோழமை ப. 41)

தன் படிப்பை விட்டு விட்டுக் குடும்பத்திற்கு வயிறாற உணவளிப்பதுடன், தன் தம்பி தங்கையைப் படிக்கவைத்து முன்னேற்றமடையச் செய்கிறான் என்பதே இக்கதையின் முடிவாக ஆசிரியர் சுட்டுகிறார்.

'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் சகத்தினை அழித்திடுவோம்' என்றார் பாரதி. ஆனால் அடித்தட்டு மக்களில் பலர் ஒருவேளை சோற்றுக்குக்

கூட வழியில்லாமல் வாழ்வது வருந்தத் தக்க ஒன்றாகும். முதலாளிகள் என்றுமே முதலாளியாகவே வலம் வருகின்றனர். ஆனால் உழைக்கும் வர்க்கம் ஒருவேளை சோற்றுக்குக் கூட வழியின்றிக் கிடப்பதால் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் வர்க்கப் போராட்டமாய் மாறுகின்றன.

## ஏற்றத் தாழ்வுகள்

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்றார் ஒரு சமுதாயப் பெரியவர். ஆனால் பிறந்தபின் தனிமனித முரண்பாடுகள் சமுதாயத்தைச் சீரழிக்கும் புல்லுருவியாகும். ஏழை பணக்காரனுக்கு இடையே ஏற்படும் வர்க்கப் போராட்டத்தைத் தன் கதைகளில் பதிவு செய்கிறார் ஆசிரியர். 'விஜயா' என்ற சிறுகதையில் வசதி வாய்ந்த குடும்பத்தில் வீட்டு வேலை செய்து வாழ்க்கை நடத்தும் விஜயாவின் பரிதாபத்திற்குரிய ஏழ்மை நிலையைக் காட்டுகிறார்.

> 'நான் வீட்டுக்குள், மின் விசிறிக்கு அடியில் பிளாஸ்டிக் பிரம்பு நாற்காலியில் எவர்சில்வர் தம்ளரிலிருந்து காப்பி உறிஞ்சிக் கொண்டு' (விஜயா, ப. 31)

பெரிய வீட்டிற்குள் மின்விசிறிக்கடியில் பிறம்பு நாற்காலியில் எவர்சில்வர் தம்ளரில் காப்பி குடிப்பது உயர்குடியைக் காட்டுகின்றது.

> 'இவள் கொல்லைப்புறத்தில் தரையில் அலுமினியத் தம்ளரிலிருந்து காப்பி குடித்தவாறு' (விஜயா, ப. 31)

ஏழ்மையிலிருக்கும் விஜயாவிற்கு ஒருநாள், தன் முதலாளி வீட்டில் அலுமினியத் தம்ளரில் காப்பி கொடுக்கின்றார். தரையில் அமர்ந்து அலுமினியத் தம்ளரில் காப்பி குடிப்பது வறுமைச் சின்னமாகக் கருதப்படுகின்றது.

இதைக் கண்ட அவ்வீட்டு முதலாளியின் மகள் தன் அம்மாவால் அடக்கு முறைக்கு உட்படுத்தப்படும் தன்வீட்டு வேலைக்காரியை நினைத்துப் பரிதாபப்படுகிறாள். இக்கதையில் ஆசிரியரே முதலாளியின் மகளாக நின்று ஏழ்மை நிலையில் வீட்டுவேலை செய்யும் விஜயாவிற்காக வருந்துவது புலப்படுகிறது. தன் வீட்டில் வேலை செய்யும் தொழிலாளிக்கு, எவர் சில்வர் தம்ளரில் ஏன் காப்பி கொடுக்கக் கூடாது? என்று கேள்வியை எழுப்புகிறார்.

'என் வாழ்வின் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் நான் படைத்தவையல்ல. எனினும் இதுபோன்ற காட்சிகளைக் காணுந்தோறும் என்னுள் எழும் இந்த உணர்வு' (விஜயா, 31)

இந்த ஏற்றத்தாழ்வுகள் தன்னால் ஏற்படுத்தப்பட்டதல்ல. இருப்பினும் சமுதாயத்தில் தான் சார்ந்த, மேட்டுக் குடிகளால் ஏற்படுத்தப்பட்ட இந்த அடிமை விலங்கை உடைத்தெறிய வேண்டும் என்று முதாலாளியின் மகள் விரும்புவதாக ஆசிரியர் கூறுவது சிறப்புடையதாகிறது. மேல்மட்டத்தில் இருப்போர் முதலில் தன் மனப்போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை முன் வைக்கிறார்.

## குழந்தைத் தொழிலாளர்கள்

சுதந்திர இந்தியாவில் பதினைந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை வேலைக்கு அமர்த்துதல் கூடாது. ஏனெனில் அவர்கள் இப்பருவத்தில் கட்டாயமாகக் கல்வி கற்க வேண்டும். கல்வி கற்க வேண்டிய வயதில் வேலைக்குச் செல்வதால் பிற்காலத்தில் கல்லாமையால் பல்வேறு இன்னல்களுக்கு ஆட்படுவர் என்று இந்தியக் குழந்தைத் தொழிலாளர்த் தடுப்புச் சட்டம் கூறுகிறது. ஆனால் வறுமையின் காரணமாகப் பெற்றோரே தங்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்புகின்றனர். சில வீடுகளில் பெற்றோர் படும் துயரத்தைக் கண்டு குழந்தைகளே இளைய வயதில் வேலைக்குச் செல்வதையும் காண முடிகிறது.

இச்சமுதாயத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிக்கப்படல் வேண்டும். அனைவருக்கும் கல்வி கிடைத்திடச் செய்தல் வேண்டும் என்பதைத் தன் அவாவாக எடுத்துக் கூறுகின்றார். மேலும் அவர்கள் படும் பல்வேறு இன்னல்களைத் தன் சிறுகதைகளின் வழி எடுத்துரைத்துள்ளார். தங்களின் குடும்ப சூழ்நிலையின் காரணமாக ஏதாவது ஒரு வேலைக்குச் சென்று தங்கள் குடும்பததைக் காப்பாற்ற வேண்டும் என்று சிறுவயதிலேயே வேலைக்குச் செல்கின்றனர் என்பதை,

'தெருவில் பத்து வயதுப் பையன் ஒருவன் ஒரு தட்டில் இரண்டு கண்ணாடித் தம்ளர்களில் காப்பி எடுத்துப் போய்க் கொண்டிருந்தான்' (நீலரிப்பனும் வானவில்லும், ப. 89)

புத்தகம் சுமக்க வேண்டிய வயதில் தன் குடும்ப பாரத்தைக் குறைப்பதற்காக டீக்கடையில் வேலை செய்யும் பத்து வயது பையனின் பரிதாபமான வாழ்க்கையைச் சாடுகிறார்.

வசந்தாவின் வயது எட்டு. அவளுடைய அப்பா இறந்த காரணத்தால் அம்மா வீட்டு வேலை செய்து வசந்தாவைக் காப்பாற்றி வந்தாள். போதிய வருவாய் இன்மையால் வசந்தாவை வேலைக்கு அனுப்பினாள். வசந்தாவுக்குக் குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் வேலை. குழந்தை வசந்தாவை இன்னொரு குழந்தைக்கு ஆயாவாக்கும் மனிதர்களும் இருக்கிறார்கள் என்பதை ஆசிரியர் 'உயர்த்திய விரல்' என்ற சிறுகதையில்,

'சிறுமி வசந்தா நல்ல நிறமாயிருந்தாள். எட்டு வயதுக்கேற்ற உயரமோ ஆகிருதியோ இல்லை. இந்தக் குழந்தையையா ஆயாவாக்கி இன்னொரு குழந்தையை இடுப்பில் கொடுத்தார்கள்?' (உயர்த்திய விரல், ப. 295)

இக்கதையின் வழி ஆசிரியர் வசந்தாவோடு தானும் பயணிக்கிறார். எட்டு வயது என்பது கட்டாயம் கல்வி கற்க வேண்டிய வயது. தன் வயதை ஒத்த சிறுவர்களோடு விளையாடும் வயது. வறுமையின் காரணமாக குழந்தைத் தொழிலாளியாக அமர்த்தப்பட்ட வசந்தாவிற்காக இரக்கப்பட்டு அவள் படும் துயரினையும் அதற்கான தீர்வையும் அழகாக எடுத்துரைக்கிறார்.

## முடிவுரை

ஆர். சூடாமணியின் படைப்புகள் பெரும்பாலும் அடித்தட்டு மக்களின் வாழ்க்கை விழுமியங்களைக் கட்டுரைக்கின்றன. அவர்கள் துயர் அடைவதற்கு முக்கியக் காரணம் வறுமை என்பதைத் தெளிவுபடக் கூறுகின்றார். அவ்வறுமை களைய வேண்டுமெனில் ஏற்றத் தாழ்வுகளைத் தகர்த்தெறிந்து சமதர்ம சமுதாயமாக மாறவேண்டும் என்கிறார். சமதர்ம சமுதாயமாக மாறுவதற்குக் குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிக்கப்பட்டு அனைவருக்கும் கல்வி கிடைக்கச் செய்தல் வேண்டும் என்பதே தீர்வாக முன்வைக்கின்றார். மொத்தத்தில் ஆர். சூடாமணியின் சிறுகதைப் படைப்புகள் இச்சமுதாயத்தில் நிலவும் தீமைகளை அறுவடை செய்து நன்மைகளை விதைக்கின்றன.

# தை !

புலவர் சி. பாண்டுரங்கன், ஆம்பூர்

மார்கழிப் பாவை நோன்பினர்தம்
மனம்மகிழ் வரம்தரும் தைப்பெண்ணே !
பார்கவிழ் பனித்திரை பொற்கரத்தால்
பக்கம் விலக்கிவந் தாய்வாழி !
சீர்எலாம் தந்தனை விளைச்சலினால் !
சிரிப்பலை வாய்க்குளம் ததும்பிநிற்கும் !
பார்எலாம் பொங்கலோ பொங்கலென்றே
பரவிநின் புகழினை வரவேற்கும் !

தைபிறந் தால்வழி பிறக்குமென்றே
தையலர் நோன்பிருந் தார்அதனால்,
தைந்நீ ராடிய அவர்விழைவைத்
தக்கவா றெலாம்நிறை வேற்றிடவே,
பைந்தமிழ் போற்றிடும் இல்லறத்தைப்
பதினொடு ஆறுபே றுடன்தந்தாய் !
ஏந்திழை யார்மனம் உவந்துயர்ந்தார் !
எழில்எழில் எழில்உன் கொடைவளமே !

அணை,அனைத் துளம்,நிறைத் துவந்தனைநீ !
அகிலமே உண்ண, விதைமுதல்நீ !
பணைத்தோள் அரிவை நிகர்அழகாய்ப்
பன்னிரு திங்களுள் நின்வனப்பே !
பிணைக்கா ளைநடை தினம்நடக்கப்
பச்சைக் கவிதை ஏர்முனையில்,
இணையிலா உழவர் எழுதவந்தார் !
இணைஎது இப்பசுங் கவிதைக்கே?

ஊரெலாம் ஊட்டிநேர் குளிர்ந்தழகாய்
உன்னத மரகதம் போர்த்துவக்கும் !
நீரெலாம் தொடக்கிளை நுனியினிலே,
நட்புறை தூக்கணாங் குருவி ( க் )கூடு !
யாரெலாம் தமக்கெனச் சொந்தவீடு
இணைகதிர் மின்ஊற் றொடுவேண்டும்
பாரெலாம் உவக்கவென் றேங்கினாரோ
பண்புரு அவர்க்கருள் தா,தையே !

# தொல்காப்பிய அடிப்படையில் கல்வெட்டு மக்கட்பெயர்கள்

திருமதி. ந. அருள்மொழி
சிவகாசி

## முன்னுரை

ஒன்றையோ, ஒருவரையோ அடையாளப்படுத்தும் குறியீடுகளாகத் திகழ்பவை பெயர்கள். உயர்திணை, அஃறிணை உயிரினங்களைச் சுட்டிக் காட்டி அழைக்கப் பயன்படுபவை பெயர்களாகும். நம்மைச் சுற்றியுள்ள உயிரினங்களும், பொருட்களும் பெயராலேயே சுட்டப் பெறுகின்றன. பெயரின்றி உலகப் பொருட்களை அல்லது மனிதர்களைப் பார்த்தால் வேறுபாடு அறியாது திகைத்து நிற்கவேண்டிய நிலையே ஏற்படும். எனவே, பெயர் என்ற அடையாளக் குறியீடு உயிரினங்களுக்கு இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது. மனிதனை அடையாளப்படுத்தவும், அழைக்கவும் பயன்படும் பெயர்கள் மக்கட்பெயர்களாகின்றன. தொல்காப்பிய அடிப்படையில் கல்வெட்டு மக்கட் பெயர்களை,

1. இடுகுறியாக அமையும் மக்கட்பெயர்கள்
2. காரணத்தோடு அமையும் மக்கட்பெயர்கள்
3. இயற்பெயரோடு சிறப்புப் பெயர் அமையும் மக்கட்பெயர்கள்
4. வண்ணச்சினைச் சொல்லாக அமையும் மக்கட்பெயர்கள்

ஆகிய நான்கு அடிப்படைகளில் வகைப்படுத்திக் காட்டுகின்றது.

## இடுகுறியாக அமையும் மக்கட்பெயர்கள்

மக்கட்பெயர்கள் பொருளோடு அமைந்திருப்பினும் பெற்றோர்கள், பெயரிட்டதற்கான காரணத்தை அறிய முடிவதில்லை. மனிதர்களுக்குப் பெயரிட்ட காரணத்தை அறிய இயலாத பெயர்களை இடுகுறிமக்கட் பெயர்கள் எனலாம். கல்வெட்டுகளில் இடுகுறியாக அமைந்த மக்கட் பெயர்களைக் காணமுடிகின்றது. முதலிஆட்கொண்டான் ( திருவாதவூர் கல்வெட்டு ) தாயாண்டாள் ( திருவாதவூர் கல்வெட்டு ), நாட்டாவுடையன் நம்பி ( ஆமூர் கல்வெட்டு ), நக்கன் ( புளியங்குளம் கல்வெட்டு ) போன்ற பெயர்களுக்கான காரணத்தை அறிய இயலாததால் இவை இடுகுறிப்பெயர்கள் என்ற வகைப்பாட்டிற்குள் அடங்குவதை அறிய முடிகின்றது.

## காரணத்தோடு அமையும் மக்கட்பெயர்கள்

மக்கட்பெயர்கள் பொருள் பொதிந்தவையாக உள்ளன. அடையாளம்

சுட்டுவனவாக உள்ளன. சில மக்கட்பெயர்கள் நிலம், குடி, உடை (உடைமை), வினை, பண்பு, குழு ஆகியவற்றைச் சார்ந்து காரணப் பெயர்களாகவும் அமைகின்றன. இதனை,

**நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின்பெயரே**
**வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள்பெயரே**
**பல்லோர்க்குறித்த முறைநிலைப்பெயரே**
**பல்லோர்க்குறித்த சினைநிலைப்பெயரே**
**பல்லோர்க்குறித்த திணைநிலைப்பெயரே**
**கூடிவரு வழக்கின் ஆடியற்பெயரே**
**இன்றுஇவர் என்னும் எண் இயற்பெயரோடு**
**அன்றி அனைத்தும் அவற்று இயல்பினவே** (தொல்காப்பியம், பெயரியல்)

என்ற தொல்காப்பிய நூற்பா வாயிலாகவும் அறிய முடிகின்றது.

நிலப்பெயர் என்பது இடத்தினால் பெற்ற பெயர் எனத் தெய்வச் சிலையாரும், ஒருவன் தான் பிறந்த நிலத்தினால் பெற்ற பெயர் என நச்சினார்க்கினியரும் குறிப்பிடுகின்றனர்.

கப்பலூருடையான் (அருவிமலைக் கல்வெட்டு), பாவையூருடையான் ( கருங்காலக்குடி கல்வெட்டு ) போன்ற பெயர்கள் இடத்தால் பெயர் பெற்றோரைக் குறிப்பிடுகின்றன. 'உடையான்' என்ற கூறுகல்வெட்டில் நிலஉடைமையாளர்களைக் குறிக்கப் பயன்படுத்தப் பெறுகின்றது. கப்பலூரில் நிலஉரிமை பெற்றிருந்தவன் கப்பலூருடையான் என்றும் பாவையூரில் நிலஉரிமை பெற்றிருந்தவன் பாவையூருடையான் என்றும் அழைக்கப் பெற்றதை அறியமுடிகின்றது. ஒருவரின் குடியை, குலத்தை அல்லது கோத்திரத்தைச் சுட்டும் பெயர்கள் குடிப்பெயர்களாக அமைகின்றன. மீனவர் ( கொட்டக்குடி கல்வெட்டு), கொங்கர் ( கொட்டக்குடி கல்வெட்டு ) போன்ற குடிப்பெயர்களைக் கல்வெட்டுகள் பதிவு செய்துள்ளன.

செய்யும் தொழிலினால் பெயர் பெறுவோரை 'வினைப்பெயர்' எனத் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது. திருவாணை ஆசாரியான் ( திருவாதவூர் கல்வெட்டு) , முனையடுவார் (திருவாதவூர் கல்வெட்டு), 'ஸ்ரீபாதம்தாங்கிகள்' (திருவாதவூர் கல்வெட்டு) போன்ற வினைப் பெயர்களைக் கல்வெட்டுகள் வழி அறியமுடிகின்றது. அரச ஆணையைக் கல்வெட்டில் செதுக்குவோர் 'திருவாணை ஆசாரியன்' எனத் தொழில் பெயரால் அழைக்கப்பட்டுள்ளனர். போருக்குச் சென்று போர்முனையில் பகைவரைச் சாய்ப்பதில் வல்லமை பெற்ற சிவனடியார் 'முனையடுவார்' என அழைக்கப் பெற்றதைப்

பெரியபுராணம் வாயிலாக அறியமுடிகின்றது. இறைவனைத் திருவீதிஉலாக் காலங்களில் சுமந்து செல்லும் பணி செய்தவர்கள் 'ஸ்ரீபாதம்தாங்கிகள்' என்று தொழில் பெயரால் அழைக்கப்பட்டதை அறியமுடிகின்றது. உடைப்பெயர் என்பதற்கு உடைமையால் பெற்ற பெயர், அவை நிலமும், பொருளும், கருவியும் பற்றி வரும் எனத் தெய்வச்சிலையார் குறிப்பிடுகின்றார். 'பூழியன்' ( திருவாதவூர் கல்வெட்டு ) என்ற பெயரை உடைப் பெயராகவும் நிலப்பெயராகவும் வகைப்படுத்திக் காணமுடிகின்றது. 'ஓருடையான்' ( திருமோகூர் கல்வெட்டு ) என்ற மக்கட்பெயர் பொருள் அடிப்படையிலான உடைமைப் பெயராகவும் இருப்பதை அறியமுடிகின்றது.

பண்பினால் பெயர் பெறுவதைப் 'பண்பு கொள் பெயர்' எனத் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது. 'சீயாழிப்பிள்ளை சிவந்த பாதத்தான்' ( சொக்கலிங்கபுரம் கல்வெட்டு ) என்ற மக்கட்பெயர் நிற அடிப்படையிலான பண்புப் பெயராக அமைந்திருப்பதை அறிய முடிகின்றது. தெய்வச் சிலையார், குழுவின் பெயராவது பலர் கூடின கூட்டத்தால் பெற்ற பெயர் என விளக்கம் தருகின்றார். நச்சினார்க்கினியர், தாம் திரண்டு ஒருதுறைக்கண் உரிமை பூண்ட பல்லோர்மேல் எக்காலத்தும் நிகழும் பெயர்கள் என விளக்கமளிக்கின்றார். கல்வெட்டிலும் குழுப் பெயர்களாக அமைந்த மக்கட்பெயர்களைக் காணமுடிகின்றது. பதிபாதமூலப்பட்டுடைப் பஞ்சாசாரியன் ( திருவாதவூர் கல்வெட்டு ) ஸ்ரீருத்ரஸ்ரீமாஹேஸ்வரர் ( புளியங்குளம் கல்வெட்டு ) ஸ்ரீகாரியஞ்செய்வார்கள் ( சொக்கலிங்கபுரம் கல்வெட்டு ) போன்ற குழுப்பெயர்கள் கோயில் சார்ந்த பணி செய்வோருக்கான குழுப் பெயர்களாக அமைந்துள்ளன. கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி, 'பட்டுடையணிந்து கருவறையுள் சென்று ஐந்து வகை நியதிகளால் நிகழ்வுறும் தெய்வ வழிபாட்டுப் பணியினைத் தூய நிலையில் செய்யும் சிவபிராமணர்கள்' எனப் பதிபாதமூலப்பட்டுடைப் பஞ்சாசாரியனுக்கான விளக்கத்தைத் தருகின்றது. சைவாகமத்தைக் கடைப்பிடித்து ஆகமநியதிகளோடு இறைவழிபாடு செய்வதுடன் மக்கள் நலனுக்கும் அமைந்த சாந்திக்கிரியைகள் செய்யும் சிவவழிபாடுடைய சைவாச்சாரியார் 'ஸ்ரீருத்ரஸ்ரீமாஹேஸ்வரர்' என அழைக்கப்பட்டதைக் 'கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி' மூலம் அறியமுடிகின்றது. கோயில் காரியங்களைக் கவனித்துக் கொண்ட அதிகாரிகளை 'ஸ்ரீகார்யம்' எனக் குழுப் பெயரிட்டு அழைத்ததை அறியமுடிகின்றது.

## இயற்பெயரோடு சிறப்புப்பெயர் அமையும் மக்கட்பெயர்கள்

மக்கட்பெயர்கள் இயற்பெயர்கள், சிறப்புப் பெயர்கள் என இரண்டு பெயர்களைத் தாங்கி நிற்கும் பெயர்களாகவும் இருக்கின்றன. தாய், தந்தையர்

தத்தம் குழந்தைகளுக்கு இட்ட மக்கட்பெயர்கள் இயற்பெயர்களாகின்றன. மனிதர்கள் சமூகத்தில் கல்வி, கலை, அரசியல், நற்பண்பு, பதவி போன்றவற்றால் மேன்மையுறும்போது சில சிறப்புப் பெயர்களைப் பெறுகின்றனர். இயற்பெயரோடு இச்சிறப்புப் பெயர்கள் இணைந்து மனிதர்களைத் தனித்துவத்தோடு அடையாளம் காட்டுகின்றன. இயற்பெயரும் சிறப்புப் பெயரும் இணைந்து மக்கட் பெயராக வருமிடங்களில் சிறப்புப் பெயர் முன்னும் இயற்பெயர் பின்னும் இடம்பெறும். இதனையே தொல்காப்பியமும்,

> ***'சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்***
> ***இயற்பெயர்க்கிளவி முற்படக் கிளவார்'*** (தொல். *கிளவியாக்கம்*)

என்ற நூற்பா வழிக் குறிப்பிட்டுள்ளது. கல்வெட்டுகளில் சிறப்புப் பெயரோடு அமையும் மக்கட்பெயர்களைக் காணமுடிகின்றது. மடாபத்யம் திருமாளிகைப் பிள்ளை, பட்டன் தென்னகங்கதேவன் போன்ற கல்வெட்டு மக்கட்பெயர்களை மேற்கூறிய நூற்பாவோடு பொருத்திக் காணமுடிகின்றது. இயற்பெயரடுத்துச் சிறப்புப் பெயர் அமைவதையும் கல்வெட்டுச் சான்றுகள் சிலவற்றின் வழியாக அறிய முடிகின்றது. அத்தாணி எட்டி, விக்கிரமபாண்டிய பிரமாதிராயன் போன்ற கல்வெட்டுப் பெயர்கள் இதற்குச் சான்றாகின்றன.

**வண்ணச்சினைச் சொல்லாக அமையும் மக்கட்பெயர்கள்**

அடையும் உறுப்பும் பெயரோடு இணைந்து காணப்படுவதை வண்ணச்சினைச்சொல் என்பர். அடை, சினை, முதல் ஆகிய மூன்றும் முறைமாறாமல் அமைவது வண்ணச்சினைச்சொல் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. இந்த வண்ணச்சினைச் சொல் உயர்திணை, அஃறிணை, ஆகிய இருதிணைப் பெயர்களுக்கும் பொதுவாக அமையும். அடை, சினை ஆகியவை முதல் என்ற மனிதப்பெயரோடு அமைந்தால் அது வண்ணச்சிலைச் சொல்லோடு அமைந்த மக்கட்பெயரைக் குறிக்கும். கல்வெட்டுகளில் உள்ள சுந்தரத்தோள் அமுதாரன், சுந்தரத்தோளுடையான் மாவலிவாணாதிராயர் போன்ற பெயர்கள் வண்ணச்சினைச் சொல்லாக அமைவதைக் கண்டறிய முடிகின்றது.

**முடிவுரை :** கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ள மக்கட்பெயர்கள் தொல்காப்பிய இலக்கணங்களுக்குள்ளும் பொருந்துவதை அறிய முடிகின்றது. இடுகுறியாகவும் காரணத்தோடும் அமையும் மக்கட்பெயர்களை அடையாளம் காணமுடிகின்றது. இயற்பெயர், சிறப்புப் பெயர் என்ற இலக்கண முறையோடு அமையும் மக்கட்பெயர்களையும் சிறப்புப் பெயர், இயற்பெயர் என முறைமாறி அமையும் மக்கட்பெயர்களையும் அறியமுடிகின்றது. மனிதர்களைத் தோற்றப்படுத்தும் வண்ணச்சினைச்சொல் மக்கட்பெயர்களையும் ஆய்ந்தறிய முடிகின்றது.

# ஆசிரியர் குழு


திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா



தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 January 2013 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month

# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

### சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

திரு. தலைமையாசிரியர் அவர்கள்
மாசாத்தியார் மாநகராட்சி பெண்கள்
உயர்நிலைப்பள்ளி
மஞ்சனக்காரத் தெரு
மதுரை - 1

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.